வீடுகள்

# TORONTO

# ரொறன்ரோவில் மீள்பாவனை

## ஆரம்பிக்கவும்! மீள்பாவனைப் பொருட்களை ஒன்றாக இடவும்

**இது புதிது:** இனிமேல் மீள்பாவனைப் பொருட்களை நீங்கள் இனம் பிரிக்கத் தேவையில்லை. அவற்றை இனம்பிரித்து, படிமுறையிடும் தொழினுட்ப உபகரண வசதிகள் தற்பொழுது ரொறன்ரோ மாநகரத்திடம் உள்ளன. எனவே நீங்கள் கொள்கலங்களையும் கடதாசிப் பொருட்களையும் ஒன்றாக வைக்கலாம். எந்தப் பெட்டியிலும் இடக்கூடிய மீள்பாவனைப் பொருட்கள் சில பின்வருமாறு:




**சிறிய, பெரிய பிளாஸ்திக் உணவுக் கலம், மூடி வகைகள்.** எச்சமிச்சத்தை அகற்றிக் கழுவி வைக்கவும்.

**சிறிய, பெரிய பிளாஸ்திக் குடுவை வகைகள்** எச்சமிச்சத்தை அகற்றிக் கழுவி வைக்கவும்.

**பால், பழச்சாறுக் கடதாசிக் குடுவை வகைகள்.** எச்சமிச்சத்தை அகற்றிக் கழுவி வைக்கவும்.

**வெற்றுத் தீந்தைக் கலம், அமுக்க கல வகைகள்.** மூடியை அப்புறப்படுத்தவும்.

**உலோகப் பேணி வகைகள்.** எச்சமிச்சத்தை அகற்றிக் கழுவி வைக்கவும். மூடியை உள்ளே இட்டு அமுக்கவும்.

**கண்ணாடிக் கலம், போத்தில் வகைகள்.** எச்சமிச்சத்தை அகற்றிக் கழுவி வைக்கவும். மூடியை அப்புறப்படுத்தவும்.

**வன் அலுமினியத் தட்டு, சிற்றுண்டித் தட்டு வகைகள்.** எச்சமிச்சத்தை அகற்றிக் கழுவி வைககவும்.

**பானப் பெட்டி வகைகள்.** உறிஞ்சு குழலை அப்புறப்படுத்தவும்.

**வீட்டுத் தாள் வகைகள்.** விளம்பரக் கடிதம், எழுதுவதற்குரிய தாள், கணினித் தாள், துண்டுப் பிரசுரம், கடித உறை வகைகள்.

**அன்பளிப்பு பொதிவுத் தாள், அட்டை வகைகள்.** குஞ்சங்களையும் முடிச்சுகளையும் அகற்றவும்.

**முட்டைப் பெட்டி, கடதாசிச் சுருள், பை வகைகள்.**

**கடதாசிப் பெட்டி வகைகள்.** கடதாசி அட்டைப் பெட்டி, தானியச் சிற்றுண்டிப் பெட்டி, மெல்லிழைத்தாள், சலவைத்தூள் பெட்டி வகைகள்.

**செய்தித்தாள், தொலைபேசி விபரக்கொத்து வகைகள்.**

**சஞ்சிகை, விபரக்கோவை, நூல் வகைகள்.**

**மடிப்புவிழுந்த கடதாசி அட்டை வகைகள்.** சுத்தமான, மெழுகிடாத, சப்பைக் கட்டுகள். ஆகக்கூடிய அளவீடு: 60X60X30 செ.மீ. (2'X2'X1').

மீள்பாவனைப் பெட்டியில் அல்லது பையில் இடாத பொருட்களைக் கட்டி வைக்கவும். (கம்பியால் கட்டலாகாது).

## இவற்றை மீள்பாவனைக்கு இடவேண்டாம்

**கண்ணாடி வகைகள்:** கண்ணாடிக் குவளை, ஏதனம், கிண்ணம், படிகம், யன்னல் கண்ணாடி, மின் குமிழ், சாயற் கண்ணாடி,

சமையற்கலம், கண்ணாடிச் சமையற்கலம், ஒப்பனைக் கல வகைகள்.

**பிளாஸ்திக் வகைகள்:** பொம்மை, ஒப்பனைக் கலம், நிரவுபசைக் கோது, பொலிஸ்தறீன் அல்லது ஸ்டைறபோம் குடுவை, ஏதன வகைகள், வாகன எண்ணெய்க் கலம், பை, வாங்கிச் செல்லும் உணவுக் கொள்கலம்,

வெதுப்பக பிளாஸ்திக் அச்சுத் தட்டு வகைகள்.

**உலோக வகைகள்:** மேலங்கி தூக்கி, சமையற்கலம், பற்றெறி வகைகள்.

**அலுமினிய வகைகள்:** அலுமினியத் தாள், பொதியுறை, பை வகைகள் (உருளைக் கிழங்குப் பொரியல் பை போன்றவை).

**இழை வகைகள்:** மெல்லிழை, மெழுகுதாள், அன்பளிப்பு பொதியிழை, மெழுகிட்ட கடதாசி அட்டை வகைகள்.

**www.toronto.ca/recycle • 416.338.2010**

Tamil/05